Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு ஜூன்மீ 5௳, வெள்ளிக்கிழமை [இதழ் 22

## லிபியா போர் பற்றிய விவரங்கள்.

### தளபதி அறிக்கை.

### காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி பிரசங்கம்.

சென்ற 1942-ம் ஞு ஜூன்மீ 2௳ காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி சர்ச்சில் லிபியாவில் நடைபெறும் போரைக் குறித்து லிபியாவிலுள்ள படைத் தலைவர் ஜெனரல் ஆச்சன்லெக் விடுத்துள்ள அறிக்கையை வாசித்தார். அதன் சுருக்கமாவது :—

சென்ற 1942-ம் ஞு மேமீ 26௳ ஜெர்மன் தளபதி ரோமெல் ஜெர்மன் ஆப்பிரிக்கப் படைகளைக் கொண்டு நம்மைத் தாக்க ஆரம்பித்தார். இதற்கு முன்னதாகவே தம் சிறந்த தளவாடங்களை எல்லாம் இந்தத் தாக்குதலுக்காக ஆயத்தம் செய்து வைத்திருந்தார். இந்த யுத்தத்தில் முடிவு கண்டு விட வேண்டு மென்பது இவருடைய எண்ணம். இந்த எண்ணத்தை தினசரி அறிக்கையில் குறிப்பிட்டாராஞலும், இந்த அறிக்கையை ஜெர்மன் படைகளுக்கும், இத்தாலியப் படைகளுக்கும் தான் வழங்கினரேயொழிய, ஜெர்மன் ஆப்பிரிக்கப் படைகளுக்கு வழங்கவில்லை.

**எதிர் பார்த்தது தான்.**

இதற்கு முன்பு நாம் கைதி செய்தவர்களிடம் இருந்த தஸ்தாவேஜிகளில் இருந்து, தளபதி ரோமெல்லன் போக்கு இன்னது என்று தெளிவாகத் தெரிந்தது. ஆகையால், இப்படிப் பட்ட நிலமையை நாம் எதிர்பார்த்து முன்னெச்சரிக்கையாகவே, எல்லா ஆயத்தங்களும் செய்திருந்தோம்.

தளபதி ரோமெல்லின் திட்டம் என்னவென்றால் : 1. பாதுகாப்பி லிருக்கும் பீர் ஹகீம் என்னும் இடத்தைக் கைப்பற்றுவது. 2. பிறகு தன் படைகளைக் கொண்டு அந்த ஊரைத் தென்புரமாகப் போய் வளைத்துக் கொள்ளுவது. 3. கடற்கரையில் கஸாலாவி லிருந்து காபுசோ வரை யுள்ள நம் வசமிருக்கும் பகுதியை மிகுந்த பலங் கொண்டு தாக்குவது.

**முதல் அடி நமது.**

நமது வேவு பார்க்கும் விமானங்கள் எதிரிகளின் ஏற்பாடுகளைத் தெரிந்து வந்தவுடனே, 1942-ம் ஞு மேமீ 21௳ முதல், இரவுகளில் நம் விமானங்கள் சென்று முக்கியமான எதிரி விமான நிலயங்களை எல்லாம் சேதப்படுத்தி விட்டு வந்தன. இதனால், எதிரிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. இதே முறையை தளபதி ரோமெல்லும் 27௳ கையாண்டார். தன் திட்டப்படி இதில் ஓரளவிற்கு வெற்றியுங் கண்டார். பீர் ஹகீம் நகரத்தின் தென்புரமாகப் போய், வெகு விரைவாக வடக்கே திரும்பி அக்ரோமு, எல் அதா, சிடி ரசக் ஆகிய ஊர்களை அடுத்து விட்டார். என்றாலும் நம் படைகள், எதிரி படைகளை அங்கிருந்து அடித்து விரட்டி விட்டன.

**கரைசேர முடியவில்லை.**

டொப்ருக் நகரத்தை யடுத்து எதிரி சப்பற் படை கரையில் இறங்க முடியவில்லை. பீர் ஹகீமுக்குக் கிழக்கே எதிரிகள் மிகவும் பலங் கொண்டு தாக்கினார்கள். அப்போது அவர்களோடு போராடியது மூன்றாவது இந்திய மோட்டார் பட்டாளக் கூட்டம் மட்டுந் தான். இந்தப் போரில் எதிரிகளுக்கு ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்பட்டபடியால் தான், மேற்கொண்டு முன்னேறி வரக் கூடவில்லை. மேலும், பீர் ஹகீமை இத்தாலியப் படைகள் தாக்கிய போது அதற்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. இந்தப் படையோடு போராடியது எதேச்சை பிரஞ்சுப் படை.

வட திசையிலுள்ள அதாவது அஸாலாவிற்குத் தெற்கே யுள்ள நம் முக்கியமான பகுதிகளைத் தாக்கிப் பிடிக்க வேண்டும் என்பது தளபதி ரோமெல்லின் மூன்றாவது திட்டம். 1942 ம் ஞு மேமீ 27௳ அத் திட்டப்படி ஜெர்மன் ஆபிரிக்கப் படைகளைக் கொண்டும் இத்தாலியப் படைகளைக் கொண்டும் தாக்கினர். பலன் இல்லை. அநேகம் பேர் உயிரிழந்தது தான் மிச்சம். 28, 29, 30௳ நம் படைகளுக்கும் எதிரிகள் படைகளுக்கும் மிகக் கடுமையான போர் நடந்தது. வடக்கே அக்ரோமாவி லிருந்து 40 மைல்களுக்குத் தெற்கே யுள்ள பீர் ஹக்கீம் வரையிலும், தொப்ருக்குக்கு அருகிலுள்ள எல் ஆதமிலிருந்து மேற்கே 30 மைல்களுக்கு அப்பாலுள்ள நம் சுரங்கங்கள் வரையிலும் இந்த யுத்த களம் பரவி யிருந்தது. இங்கே எதிரிகளுக்கு ஒரு விநாடி கூட ஓய்வில்லாத படி நம் படைகள் போராடின. தளவாட சப்ளையும், உணவுப் பொருள்களும், தண்ணீரும், குறைந்து விட்டன. ஆகவே, சுரங்கங்கள் இருக்கும் நம் இடங்களில், இடை வெளிகள் ஏற்படத் தக்க படி கபிஸோ ரோடு நெடுகவும், தெற்கே 10 மைல்களுக்கு அப்பாலிருக்கும் மற்றொரு ரோடிலும், தம் படைகளை எதிரிகள் அமைத்திருந்தார்கள். இந்த இடை வெளிகளில் தம் சேனைகளை மேலும் செலுத்திக் கொண்டு வர எதிரிகள் முயன்றார்கள். அப்போது நம் விமானப் படை வந்து, எதிரி முயற்சியைக் குலைத்தது. 31௳ தன் டாங்கிகளையும் மோட்டார் படையையும் ஒரு இடை வெளிக்குள் பின் வாங்கிக் கொண்டு, அதைத் தகுந்தபடி பாதுகாத்துக் கொண்டு வந்தார்கள். இங்கே இன்னும் கடுமையான போர் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

எதிரிகளின் முன் தளத்திலிருந்து மேற்கே 20 மைல்கள் தூரம் வரை, எதிரிகள் பரவி யிருக்கக் கூடும். பீர் ஹகீமுக்குக் கிழக்கே யுள்ள பகுதிகள் நமக்குச் சொந்தமானவை. இங்கே போய் எதிரி படைகள் புகுந்து கொண்டன. எனவே நம் படைகள் எதிரிகளை நாசம் செய்து கொண்டு வருகின்றன. அநேக டாங்கிகளையும் மோட்டார் வண்டிகளையும் நாசஞ் செய்து விட்டன. இரண்டு பெரிய தொழிற்சாலைகளைக் கைப்பற்றிக் கொண்டன. இன்னும் கடுமையான போர் நிகழ்ந்தாலும் நிகழக் கூடும். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. தளபதி ரோமெல்ஸ் திட்டம் நிறை வேறாது. என்றாலும், இந்தப் போரில் இரு தரத்தாருக்கும் மிகுந்த நஷ்டந் தான். நம் படைகளின் உணர்ச்சி மிகவும் பாராட்டத் தகுந்தபடி இருக்கிறது.

# கொரியர்களுக்கு மேலும் தொல்லைகள்.

## கட்டாய இராணுவப் படை திரட்டுகின்றனர்.

### ஜப்பான் சர்க்கார் பிரகடனம்.

ஜப்பானிய சர்க்கார் ஒரு பிரகடனம் செய்திருக்கின்றனர். இதன்படி, கொரியாவிலுள்ள வாலிபர்கள் அத்தனைப் பேரும் இராணுவத்தில் 1944-ம் வருஷம் சேரவேண்டும். இதிலிருந்து ஒரு விஷயம் உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெரிகிறது. ஜப்பான் ஆள் பலம் குறைந்து விட்டது என்பதைத் தான் இது அறிவிக்கிறது. ஆசியாவின் மற்ற எல்லாப் பகுதிகளை விட கொரியாவில் தான் ஜப்பானியர்களை மிகவும் அதிகமாக வெறுக்கிறார்கள். இது காரணமாக இங்கே இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பது ஜப்பானியர்களுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும். தன் சேனைகளுக்குக் கட்டாயமாகக் கொரியர்களைச் சேர்ப்பதன் மூலம் அவர்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்களென்று தெரியுமா? காடு வெட்டுதல், ரோடுகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் முதலிய கடுமையான வேலைகளுக்கு, கட்டாயமாக, கொரியர்களில் போதுமான பலமுள்ளவர்களைச் சேர்த்து, அவர்களைத் தகுந்தபடி காவல் புரியவேண்டும் என்பது தான் அவர்கள் உத்தேசம்.

கட்டாயப் படுத்தி, கொரியர்களைக் கொண்டு ஒரு இராணுவத்தை அமைத்த போதிலும் கூட, அது நம்பத் தகாத தோர் படையாகத் தான் அமையும். ஏனென்றால், ஜப்பானியர்களைக் கொரியர்கள் வெறுக்கிறார்கள். தம்மை ஜப்பானியர்கள் படுத்திய கொடுமைகள் தான், இந்த வெறுப்புக்குக் காரணம். எனவே, மீண்டும் தம் விடுதலை பெறும் நாளை, கொரியர்கள் எதிர் நோக்கி யிருக்கின்றார்கள்.

---

# கார்க்கோவ் முனையில் ஜெர்மானியர் பின் வாங்குகிறார்கள்.

### இலாப நஷ்டக் கணக்கு.

சென்ற 1942 வருஷம் மேமீ 30உ இரவு சோவியத் தகவல் போர்டார் கீழ்க் கண்ட விசேஷச் செய்தியை வெளி யிட்டார்கள் :—

ரோஸ்தோவ் போர் முனையின் ஒரு பகுதியில் ஜெர்மானிய பாசிசப் படைகள் எப்படித் தாக்குவதெனத் திட்ட மிட்டிருந்தார்களோ, அத்திட்டத்தை சோவியத் படைத் தலைவர்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பே தெரிந்து கொண்டார்கள். இந்தப் போர் முனைப் பகுதியில், அத்திட்டப்படி ஜெர்மன் படைத் தலைவர்கள் குறைந்தது 30 காலாட் படை டிவிஷன்களையும் 6 டாங்கி டிவிஷன்களையும், ஏராளமான விமானப் படையையும் திரட்டி வைத்திருந்தனர். இவர்கள் இந்த படைகளை அங்கே திரட்டி வைக்கும் முன்னதாகவே, சோவியத் படைத் தலைவர்கள், இவ்வளவு பெரிய படையை வெல்லத் தகபடி ஒரு பெரிய படையை திரட்டிக் கொண்டு போய். பதிய வைத்திருந்து, தாமே ஜெர்மன் படைகளை முதலில் தாக்கினார்கள். அதனால் தான் கார்கோவ் நகரத்தைக் கைப்பற்ற ருஷ்யப் படைகளால் முடிந்தது. இந்த நகரத்தைக் கைப்பற்ற வேண்டு மென்று சோவியத் படைத் தலைவர் முதலில் திட்ட மிடவே யில்லை. இங்கே பாசிசப் படைகளுக்குச் சரியான தோல்வி கிடைத்தது.

இந்தப் போராட்டத்தில் சோவியத் படைகளுக்கும் மிகுந்த சேதம் ஏற்படத் தான் செய்தது. சென்ற இரண்டு வாரங்களாக பாசிசப் படைகள் இங்கே போராடிக் கொண்டிருந்தாலும் ஒரு இடத்தில வது, அவர்கள் ஆற்றைக் கடந்ததாகத் தெரியவில்லை.

இங்கு நடைபெற்ற போராட்டத்தி லிருந்து மூன்று கேள்விகள் பிறக்கின்றன—(1) வசந்த காலத்தில் தாக்குவதற்காக ஜெர்மானியர் போட்டிருக்கிற திட்டத்தை சோவியத் படைத் தலைவரான திமோஷேங்கோ கவிழ்த்து விட்டாரா? (2) எவ்வளவு பெரிய சேனையை ஜெர்மானியர்கள் இந்தப் போர் முனைக்கு அனுப்பினார்கள்? (3) இங்கே அவர்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது?

கார்கோவ் யுத்த முனையில் ஏற்பட்ட இலாப நஷ்டக் கணக்கை ரஷ்யப் படைத் தலைவர் வெளியிட்டிருக்கிறார். ஜெர்மானியர் வெளியிட்டிருக்கும் அறிக்கையோடு இந்த அறிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், ஜெர்மன் அறிக்கை எவ்வளவு தூரம் பொய் என்பது நன்றாகத் தெரியும்.

ஜெர்மன் படையில் இறந்து போனவர்களும் கைதியானவர்களும் 95,000 பேர்கள். இவர்களில் ஒரு சிலர் உத்தியோகஸ்தர்கள்; அன்றியும் 540 டாங்கிகளும், 200 விமானங்களும் கைப்பற்றப் பட்டன. சோவியத் படைகளில் இறந்து போனவர்கள் 5000 பேர்கள், காணாமல் போனவர்கள் 70,000 பேர்கள். 300 டாங்கிகளும், 832 பீரங்கிகளும் சோவியத் படைகளுக்கு நஷ்டம்.

இந்த யுத்தத்திலேயே ஜெர்மன் தளபதி மார்ஷல் வான்பாக்குக்கும் சோவியத் தளபதி மார்ஷல் திமோஷேங்கோவிற்கும் நடைபெற்ற போர் தான மிகவும் கடுமையான போர். அளவு கடந்த வீரத்தோடும் மன உறுதியோடும் இரு கட்சியினரும் போராடினார்கள். இங்கே ஜெர்மானியர் வசம் இருந்த ஒரு கிராமத்தை சோவியத் படைகள் மீண்டும் கைப்பற்றியதுடன், அதை யடுத்து ஜெர்மானியர் ஆதினத்திலிருந்த ஒரு குன்றையும் கைப்பற்றினர். இங்கிருந்த ஜெர்மன படைகளை விரட்டி யடித்து விட்டனர். இந்தக் குன்றை விட உயர்ந்த மற்றொரு குன்றிற்கு ஜெர்மன் படைகள் போய்ச் சேர்ந்து, அதைக் காப்பாற்றிக் கொள்ள அரும் போராடிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் ஏராளமான படைகளையும் யுத்தத் தளவாடங்களையும் திரட்டிக் கொண்டு வந்து வைத்திருந்த போதிலும், இரண்டு வாரங்களுக்குள் சோவியத படைகள் அவற்றை வெகுவாகச் சின்னா பின்னப் படுத்தி விட்டன.

சென்ற 1942-ம் வருஷம் மேமீ 31உ நடு இரவில் சோவியத் படைத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தம் யுத்தக் கப்பல்களும் விமானங்களும், எதிரிகளுக்குச் சொந்தமான 8500 டன் போக்கு வரவுக் கப்பல் ஒன்றை கருங் கடலிலும், எதிரிகளின் ட்ராலர் ஒன்றையும், போக்கு வரவுக் கப்பல் ஒன்றையும் பின்லந்து வளைகுடாவில் மூழ்கடித்து விட்டன என்று தெரிவிக்கிறார்.

---

### வ ரு ந் து கி றோ ம்.

**சென்னை சாப்பர்ஸ் அன்டு மைனர்ஸ் படையைச் சேர்ந்த 12948 நம்பர் ஜமேதார் ஆர். கே. சீனிவாசய்யா காயப்பட்டார் என்று கேட்டு வருந்துகிறோம்.**

## விமானம், வெகு தூரத்தில் பறக்கிறதோ ?



**பூதக்கண்ணுடி கொண்டு பார்ப்பவர் பிரிட்டிஷ் விமானப் படைத் தலைவர் ராம்ஸ்பாட்டம் இஷர்உட். இவர் ரஷ்யாவில் சோவியத் விமானப்படைகளுடன் சேர்ந்து கொண்டு போராடுகிறுர். இவருடன் இருக்கும் இருவரும் சோவியத் விமானப் படைத் தலைவர்கள்.**

# "நடுப் பகலில் டோக்கியோவைத் தாக்கினேம்"

## விமானத் தொழிற்சாலை மீது வெடிகுண்டு உற்பத்திக்குப் பெரும் தடை.

ஜப்பானிய நகரங்கள் மீது, அமெரிக்க விமானிகள் வெடி குண்டுகளை வீசிப் பெருத்த சேதத்தை உண்டாக்கினுர்கள். இது பற்றி பிரிகேடியர் டேலிட்டில் என்பவர் ல உருசியான விவரங்களைக் கூறுகிறுர். அவர் கூறுவதாவது :—

"நடுப் பகலிலே தான் நாம் வெடி குண்டுகளை வீசினேம். அப்போது நம் விமானங்கள் மிகவும் தாழப் பறந்தன. மேகங்கள் தடை செய்யவு மில்லை."

திடீ ரென்று புகுந்து தாக்கும் முறை தம் சொந்தச் சொத்தாக ஜப்பானியர் மதித்து வந்தார்கள். இப்போது இதே முறையைத் தான் நாமும் கை யாண்டோம்.

**தளத்திலே புதுக் கப்பல் நாசம்.**

தென் டோக்கியோ கடற் படைத் தளத்தி லிருந்த ஒரு புதிய யுத்தக் கப்பலை நம் விமானங்கள் நேர் முகமாகத் தாக்கி நாசம் செய்தன மேலும், நகோயாவிற்குச் சமீபத்தில் இருக்கும் விமானத் தொழிற்சாலை மேல், சுமார் சால் மைல் தூரத்திற்கு, நெடுக சில்லரை வெடி குண்டுகளை நம் விமானங்கள் பெய்து கொண்டே போயின. இது மித்சுபிஷி தொழிற்சாலை என்பதில் சந்தேகமே இல்லை. இங்கே தான் யுத்த விமானங்கள் தொகுக்கப் படுகின்றன.

ஜப்பானின் முக்கிய தீவில் வெவ்வேறு இடங்களில் 21 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றை ஜப்பானிய சர்க்கார் மேற் பார்க்கிறுர்கள். ஒவ்வொரு தொழிற்சாலையும் யுத்த விமானத்தின் ஒவ்வொரு பகுதியைச் செய்து முடிக்கிறது. இவை எல்லாம் நகோயாவின் வெளிப் புரத்திலுள்ள மித்சுபிஷி தொழிற்சாலைக்கு அனுப்பப் படுகின்றன. இங்கே தான், இந்தப் பாகங்களை எல்லாம் ஒன்ருகச் சேர்த்து இணைக்கிறுர்கள்.

ஆகையால் இந்தத் தொழிற்சாலை நெடுக வெடி குண்டுகளை வீசினுல், எந்த அளவிற்குச் சேதம் விளையும் என்று இலகுவில் உணர்ந்து கொள்ளலாம். இணைக்கப்படும் பகுதியிலேயோ இணைத்து வைக்கப் பட்டிருக்கும் பகுதியிலேயே நாசம் ஏற்பட்டால், விமான உற்பத்தி பெரிதும் தடைப்படும்.

இப்போது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளில், ஜப்பானில் தான் மிகவும் தாமதமாக விமானங்கள் தயாரிக்கப் படுகின்றன. இங்கே $1\frac{1}{2}$ மணி நேரத்தில் ஒரு விமானம் தயாரிக்கிறுர்கள் ; ஆனுல். அமெரிக்காவில் $8\frac{1}{2}$ நிமிஷங்களில் ஒரு விமானம் தயாரிக்கிறுர்கள் இப்போது அமெரிக்க விமானங்கள், மித்சுபிஷி தொழிற்சாலையைத் தாக்கியதனுல், ஜப்பான் விமான உற்பத்தி இன்னும் அதிகமாகத் தடைப் படும்.

# தேசீயப் போர் முனையில் ஏன் சேர வேண்டும்?

## ஸ்டாதாம் கூறும் காரணங்கள்.

'மாப்பிள்ளை ரிவியூ' என்னும் பத்திரிகையில், சென்னை கல்வி இலாக்கா டைரக்டர் மிஸ்டர் ஆர். எம். ஸ்டாதாம் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சுருக்கமவது :—

**தேசீய போர் முனையில் ஏன் சேர வேண்டும்?**

எதிரிகள் நம்மைத் தாக்குவதனால் உண்டாகக் கூடிய அபத்துக்களி லிருந்து தென்னிந்தியாவிலுள்ள பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய பொது நேக்கத்தோடு எல்லோரும் ஒன்று பட வேண்டியது தான் தேசீயப் போர் முனையின் முக்கியமான கடமை என்று எனக்குத் தோன்றுகிறது. இம்மாகாணத்தி லுள்ள பையன்களுக்கும் பெண்களுக்கும் மிகச் சிறந்த முறையில் கல்வி புகட்ட வேண்டிய பெரிய புனிதமான பொறுப்பை நான் மேற்கொண்டிருக்கிறேன். கடைசியில் ஆண் பெண் அடங்கலும் படித்தவர்களாக இருக்க வேண்டு மென்பதே என் ஆசை. ஆனால், தேசீயப் போர் முனையின் அங்கத்தினன் என்னும் முறையில், என் பொறுப்பு மேலும் அதிகரித்திருக்கிறது. 35 லட்சம் மாணவர்களின் பாதுகாப்பிற்கும் நான் பொறுப்பாளியாயிருக்கிறேன். உங்களுக்கு ஒரு வேண்டுகோள்! ஆபத்து எற்படுமானால், கல்வி சம்பந்த முள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதில் மிகுந்த அக்கரை கொள்ள வேண்டும். இதன் பொருட்டு நாம் அனைவரும் தேசீயப் போர் முனையில் சேர வேண்டும். அப்போது, இந்தியாவைப் பாது காக்கும் நம் படைகளுக்கு நம் ஆதரவை அறிவித்தவர்களாவோம். அன்றியும் உள்ளூரில் நேரக் கூடிய சம்பவங்களிலும் நம் நாட்டவர்களுக்கு உதவியாய் இருப்போம்.

இப்போது இந்நாட்டில் உள்ள மனத் தாங்கல்களைப் பொருள் படுத்தாது, நம் நாட்டு இளைஞர்களின் இன்பத்திலும் நல்வாழ்விலும் தான் அக்கரை கொண்டிருக்க வேண்டும். இந்த வேண்டுகோள் நான் விடுத்ததா யிருந்தாலும் சரி, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் விடுத்ததாயிருந்தாலும் சரி, குழந்தைகளை நேசிக்கிறவர்களும், பெண்களைக் காப்பாற்றும் ஆண்மை யுள்ளவர்களும் இந்த வேண்டு கோளை மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

---

# விவசாயிகளுக்கு சர்க்கார் வாக்குறுதி.

## விலைகள் குறையாதபடி தடுக்க ஏற்பாடுகள்.

ஏராளமாக உணவுப் பொருள்கள் சாகுபடி செய்ய வேண்டு மென்று இந்தியா சர்க்கார் விவசாயிகளைப் பெரிதும் தூண்டுகிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் ஏராளமாக உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்கிறதாக வைத்துக் கொள்ளுவோம். இந்த ஏராளமான சாகுபடிக்கு கிராக்கி இருக்குமா என்னும் கேள்வி இதிலிருந்து பிறககிறது. இப்போது நடை பெறும் போர், திடீரென்று நின்று விடுமானால், இந்த அளவிற்கு உணவுப் பொருள்கள் தேவைப் படாது. அப்போது ஏராளமான உணவுப் பொருள்கள் மிகுதியாகும். இவற்றை வாங்குவோர் இல்லையானால், விலை குறையத் தான் செய்யும்.

இப்படிப்பட்ட நிலைமை ஏற்படவே இடமில்லை என்று இந்தியா சர்க்கார் கருதுகிறார்கள். இதனால் பெருத்த நஷ்டம் ஏற்படு மென்று பெருக்கிக் கூறுவோர்களின் வார்த்தைகளைக் கேட்க வேண்டாமென்று இந்தியா சர்க்கார் விவசாயிகளுக்குக் கூறுகிறார்கள். அன்றியும், இந்த நெருக்கடியான நிலைமையில், உணவுப் பொருள்கள் சாகுபடியை, தேவைக் கேற்றபடி அதிகப்படுத்திக் கொண்டு போக வேண்டு மென்றும் கோருகிறார்கள். உணவுப் பொருள்கள் எல்லாப் பக்கங்களிலும் ஏராளமாகத் தேவைப் படுகின்றன. எனவே, இப்போதைக்கு அவற்றின் விலை வெகுவாகக் குறைய சாத்தியமில்லை.

யுத்தம் நின்று போன போதிலும் கூட, அதனால், நாசமான நாடுகளுக்கு தேவைப் படும் உணவுப் பொருள்கள் அதிகமாகுமே ஒழிய, குறையாது. மேலும், இப்போது இந்தியாவில் சாகுபடி யாகும் உணவுப் பொருள்களை விட மிகவும் அதிகமாகவே, இனி இந்தியாவுக்கே தேவைப் படும். ஏனென்றால், இந்தியாவின் ஜனத்தொகை பெருகிக் கொண்டேயிருக்கிறது.

நிற்க, சாகுபடியாகும் உணவுப் பொருள்களை களத்தி லிருந்து, தேவைப்படும் இடங்களுக்கு அனுப்ப தற்காலிகமாகக் கஷ்டங்கள் ஏற்படலாம். இது காரணமாக இந்தச் சரக்குகளை விற்கவும் கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். அப்படிப் பட்ட நிலமை ஏற்படுமானால், சரக்கின் விலை மிகவும் குறைந்து விடாத படி, அவற்றை இந்திய அரசாங்கத்தாரே வாங்கிக் கொள்ள வேண்டும் என்று, சென்ற 1942-ம் வருஷம் ஏப்ரல் மீ 4உ டில்லியில் கூடிய உணவுப் பொருள் சாகுபடி மகா நாட்டார் சிபார்சு செய்தது, இந்த மாதிரி நிலமையைச் சமாளிக்க வேண்டித் தான்.

இந்தச் சிபார்சின் தத்துவத்தை இந்தியா சர்க்கார் ஒப்புக் கொண்டு விட்டார்கள். இதில் சம்பந்தமுள்ளவர்களைக் கலந்து ஒரு தெளிவான திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையே இந்தியா சர்க்கார் விவசாயிகளுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறார்கள். சாகுபடியாகும் உணவுப் பொருள்களின் விற்பனையைப் பாதிக்கத் தகுந்த முறையில், ஏதெனும் நிலமை ஏற்படுமானால், அதனால் சரக்கின் விலை குறைந்து விடாதபடி தடுக்க வேண்டி, பிரிட்டிஷ் இந்தியாவிலும், இந்திய சமஸ்தானங்களிலும் உள்ள சரக்குகளை, சர்க்காரே விலைக்கு வாங்கிக் கொள்ளுவார்கள். ஏராளமாக உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்ய வேண்டு மென்று இந்தியா சர்க்கார் வேண்டிக் கொள்ளுவதற்கிணங்க, சாகுபடி செய்கிறவர்கள் நஷ்ட மடையாதபடி பார்த்துக் கொள்ளுவதில் அவர்கள் மிகவும், அக்கரையோடு இருக்கிறார்கள்.

---

# இந்தோ-சீனாவைப் பங்குபோட முயற்சி.

## ஜப்பான் இரகசியத் திட்டம்.

இந்தோ-சீனாவைப் பங்கிட்டு, கம்போடியாவையும் லோசையும் தாய்லாந்துக்கும், கொச்சின் சீனா, அன்னம், டாங்கிங் ஆகிய பகுதிகளை நாங்கிங்கிலுள்ள பொம்மை சர்க்காருக்கு கொடுப்ப தென்று ஜப்பானிய சர்க்கார் இரகசியத் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறதாக வாஷிங்டனுக்குச் செய்தி எட்டுகிறது. இது பற்றி இந்தோ-சீனா அதிகாரிகளையோ, பொது ஜனங்களையோ ஜப்பான் சர்க்கார் கலந்து கொள்ள வில்லை என்று தெரிகிறது.

ஜப்பானிய 'ஆதரவு' என்பது இதுதான்!

# சிரித்தவர் துடிப்பு.

'லண்டனில் எண்ணற்ற கட்டிடங்கள் சாம்பலாயின. பிரசித்தி பெற்ற சரித்திர சம்பந்தமான இடங்கள் பாழாயின ஒரு பாவமும் அறியாத குழந்தைகளும். ஸ்திரீகளும், கிழவர்களும், நோயாளிகளும் தாக்கப்பட்டனர் சொல்லி முடியாத சேதம்' என்ற சேதிகள் ஜெர்மன் விமானிகள் ஜெர்மன் மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்த பொழுது, ஜெர்மானியர் எல்லாம் எவ்வளவு குதூகல மடைந்திருப்பார்கள்? 'நாஸிப் படைகளுக்கு எதிராக, பிரம்மதேவன் வந்தாலும் நிற்க முடியாது' என்று தம்பட்டம் கொட்டிக்கொண்டு, மளமளவென அப்படைகள் முன்னேறிக் கொண்டிருந்ததைப் பார்த்து, நாஸிகள் எவ்வளவு ஆனந்த மடைந்திருப்பார்கள்! ஹிட்லரைப் போன்ற மகா சூரர் இனி உலகிலே பிறக்கப் போகிறாரா என்ன என்றே நினைத்திருப்பார்கள்!

ஆனால், அதெல்லாம் பழைய கதை. இன்று நடப்பதென்ன? முதல் இரண்டு வருட காலமாக இளித்துக் கொண்டிருந்த ஜெர்மன் மக்கள், மூன்றும் வருடம் பிறந்தது முதல், முழி பிதுங்க, பல்லை மூடிக் கொண்டு, 'உம்' என்று இருக்க வேண்டி வந்து விட்டது. அதோடு மட்டுமில்லை. நாளாக ஆக, அவர்கள், 'அப்பப்பா! ஐய்யய்யோ! சகிக்கலையே!' என்று அலற வேண்டிய நிலைமையும் உண்டாகி விட்டது. பாவம்! முதலில் சிரித்தால், கடைசியில் அழ வேண்டியது தான் என்ற பழமொழி அவர்கள் ஊரில் பழக்கத்தில் இல்லை போலிருக்கிறது. ஆனால், இந்தப் பாடமும் முதலில் துடித்தாலும், பிறகு சுகமுண்டு என்ற பாடமும் நம் ஊர்களிலே உண்டு. அதோடு, பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதும் நமக்குத் தெரியும். அப்பளாத்தை அடுப்பில் போட்டு சுட்டு எடுப்பதென்றால், அவ்வப்போது கையில் கொஞ்சம் சூடு படத் தானே செய்யும்? 'உப்! உஸ்' என்று ஊதிக் கொண்டு, அப்பளாத்தைச் சுட்டு விட்டால், அப்புறம்' 'க்றக். முறக்' என்று ஜோராக இருந்து தின்னலாமல்லவா?

அதே போல், யுத்தத்திலே சிக்கிக் கொண்டு விட்ட நேச நாடுகளை, அவ்வப்போது சூடு பெற்றாலும், கடைசியில் தனித்து வெளியில் எடுத்து விட்டு, இன்பமுறலாம் என்ற நம்பிக்கை ஜன நாயக நாட்டு கோஷ்டியினருக்கு இருக்கத் தான் இருக்கிறது.

ஆனால், ஜெர்மானியரோ, அப்பளாத்தை அடுப்பில் போடுவதற்குப் பதிலாக, கையையே அடுப்பில் திணித்துக் கொண்டு விட்டார்கள். 'எங்கள் நாஸி முஷ்டி மகா பலமானது! இதோ பாருங்கள்' என மூடின கையைத் திறக்காமல் அடுப்பில் திணித்துக் கொண்டு விட்டதால், இப்பொழுது அக்கையைச் சட்டெனத் திரும்ப எடுத்துக் கொள்ள முடியவில்லை. கைவெந்து, ரணமாகி விடும் போலிருக்கிறது. அப்படியே அந்தக் கையை வெளியே இழுத்துக் கொண்டாலும், அப்புறம் வெகு காலத்திற்கு அது உபயோகப்படுமா என்பது சந்தேகமே! வாய்க்கு ருசியாக எதாவது தயாரிக்கப் போய், கையை வேக வைத்துக் கொள்ளுகிறவனை யாராவது புத்திசாலி என்பார்களா? அவனைப் புத்திசாலி என்று அழைப்பவர்கள் தான், ஹிட்லரையும் புத்திசாலி என்று அழைப்பார்கள்!

'ஜெர்மானியருக்கு வாழ இடம் பெற்றளிக்கிறேன்; சென்ற யுத்தத்தில் ஏற்பட்ட அவமானங்களைப் போக்குகிறேன். ஐரோப்பாவிலே ஒரு நவ யுகத்தைச் சிருஷ்டிக்கிறேன்' என்று ஆடம்பரமாகப் பேசிக் கொண்டே, ஜெர்மனியைப் போரில் சிக்க வைத்து விட்டார் ஹிட்லர். ஆனால், சென்ற மகா யுத்தம் முடிந்ததி லிருந்தே ஜெர்மனியில் வெகு ரகசியமாக, மறு யுத்தத்திற்கான ஏற்பாடுகள் நடந்து வந்திருக்கின்றன. ஹிட்லர் பதவிக்கு வந்ததி லிருந்து, வெகு காரசாரமான முயற்சிகளில் ஈடுபட்டார். பழைய சமாதான நிபந்தனைகளையும், சர்வதேச சட்டத்தையும் மீறி, ஜெர்மனியின் ஆயுத பலத்தை வெகுவாக அதிகரிக்கச் செய்து விட்டார். ஆனால், ஜன நாயக நாடுகள், தர்ம நியாயத்திற்குக் கட்டுப்பட்டு, போருக்கு எத்தகைய யத்தனமும் செய்யாமலிருந்தன. ஆகவே, திடீரென்று நாஸிகள் தாக்க ஆரம்பித்ததும், நேச நாட்டினர் திகைத்து விட்டனர். தங்களது அதிகப்படியான ஆட்களையும், ஆயுத பலத்தையும் கொண்டு, நாஸிகள், நிராயுதபாணிகளை எல்லாம் தோற்கடித்து, அவர்களிருந்த பிரதேசங்களை ஆக்ரமித்துக் கொண்டனர்.

அவர்களுடைய நாடுகளை நாஸிகள் பறித்துக் கொண்டார்களே ஒழிய, அவர்களுடைய மனங்களை நாஸிகள் கொள்ளை கொண்டு விட வில்லை. தம்மீது அந்தந்த நாட்டு மக்களுக் குண்டான த்வேஷத்தைத் தான் அதிகமாகும்படி செய்திருக்கிறார்கள் நாஸிகள். ஹிட்லர் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் நாடுகளின் சர்க்கார்கள் எல்லாம், பிரிட்டனி லிருக்கின்றன. தமது பலத்தை அவை மெதுவாகப் பெருக்கிக் கொண்டு வருகின்றன. போதாக் குறைக்கு, இப்பொழுதே, நாஸிகள் ஆக்ரமித்த நாடுகளில், அங்கங்கே புகைச்சல் தோன்றிக் கொண்டிருக்கிறது.

நாஸிகளில் பயங்கரப் புலியாகிய ஹீட்ரிச் என்பவரை, யாரோ தாக்கி விட்டார்கள். அவர் ஆபத்தான நிலைமையை அடைந்து விட்டார். இந்த மகானுபாவன தான் ஜெர்மானிய ரகசிய போலீஸ் இலாகாவின் தலைவன், மனுஷப் புலி, கொலைசெய்வதென்றால், கத்தரிக் காயை வெட்டச் சொல்வதுபோலவே நினைப்பு இந்தப் புண்ணியவானுக்கு. ஆக்ரமிக்கப் பெற்ற பிரதேசங்களில், ஒரு ஜெர்மானியர் சுடப்பட்டாலோ, தாக்கப்பட்டாலோ, அதற்கு ஈடாக, அந்தப் பிரதேசங்களில் உள்ள பலர் உடனே பிடிக்கப்பட்டு, துப்பாக்கி முனையில் சுடப்படுவர் என்ற அழகான ஆக்ஞையைப் பிறப்பித்து அதை அமுல்படுத்தி வருகிறவர் இவர்தான். இவர் கழுத்திற்கும் எவனோ ஒருவன் வைத்து விட்டான் கத்தி. இவரைத் தாக்கியவனைப் பிடிப்பவர்களுக்குக் கோடி நாணயம் தருவதாக, ஜெர்மன் அதிகாரிகள் சொல்லி யிருக்கிறார்களாம். ஹீட்ரிச்சின் காயங்கள் பலமாக இருந்தும், அவரது திடமான தேக பலம் காரணமாக, அவர் குணமடையக் கூடும் என்கிறார்கள். இம்மாதிரியே, ஸீக், பிரான்ஸ் தேசங்களில் அடிக்கடி ஜெர்மானியர் கொலை செய்யப் படுவதும், பதிலுக்கு அந்தந்த நாட்டினர் சுடப் படுவதுமா யிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? ஜெர்மானிய ஆட்சி வேப்பங் காயாக இருப்பதைத் தானே காட்டுகிறது? இந்தப் புகைச்சல் என்றோ ஒரு நாள் பெருந் தீயாகப் பிடிக்கப் போகிறது என்பதில் சந்தேகமே யில்லை.

இதற் கிடையில், ஜெர்மானியர், முதல் இரண்டு வருடங்களில் சிரித்த சிரிப்பை விட, இப்பொழுது துடிக்கும் துடிப்பு அளவில் நிச்சயமாக அதிகமாகவே இருக்கு மென்பதில் சந்தேகமே வேண்டாம்.

நாளுக்கு நாள் நேச நாடுகளின் பலம் வலுத்து வருகிறது. பிரிட்டனின் கை ஓங்கி வருகிறது. இந்நாளைய யுத்தம் விமான யுத்தமாதலால், சென்ற மூன்று வருடங்களாக, இந்த விமான உற்பத்தி வேலையை, மற்ற வேலைகளை விட அதிக சிரத்தையோடு பிரிட்டன் கவனித்து வந்திருக்கிறது. 'நெருப்புக் கக்கி' (ஸ்பிட்பையர்) விமானம் என்பது பிரிட்டிஷ் விமானங்களில் மிகச் சிறந்தது. அதி வேகமாகப் பறக்கக் கூடியது, அசாத்திய முள்ளது. அதோடு, அமெரிக்கப் 'பறக்கும் கோட்டை' விமானங்கள் சேர்ந்திருக்கின்றன. அடிக்கவும், குண்டு போட்டு நொறுக்கவும் ரொம்ப சௌகரி மாகப் போச்சு!

இப்பொழுது, தங்களுடைய விமான பலத்தை பிரிட்டிஷார் ஜெர்மன் மக்களுக்குக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். சும்மா, தங்களுடைய ஊர் விமானங்களைப் பார்த்துப் பார்த்து, ஜெர்மானியர் சலித்துப் போயிருப்பார்கள். அவ்வாறு சலித்து போன அவர்களுடைய கண்களுக்கு, பிரிட்டனின் நூதன விமானங்கள் நல்ல காட்சியாகவே இருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. அதுமட்டுமா? 'அதப்பா! என்ன போடு போட்றுங்க இந்தப் பசங்க!' என்று, பதுங்கிய இடத்தி லிருந்து, மனசால் எண்ணி வியந்து கொண்டிருப்பார்கள் ஜெர்மானியர்.

காரணம், சென்ற சில மாதங்களாக, பிரிட்டிஷ் விமானிகள் செய்து வரும் சாகசச் செயல்கள் தான். சென்ற வாரக் கடைசியிலும், சென்ற திங்கட்கிழமை

யன்றும் ஆயிரம் பிரிட்டிஷ விமானிகள், ஜெர்மனியின் ஜீவ நாடிகள் போன்றிருக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த இரு பிரதேசங்கள் மீது படையெடுத்துச் சென்று, சக்கைப் போடு போட்டு விட்டு வந்துவிட்டார்கள். முதல் நாளிட்ட தீ, மூன்று நாட்களுக்கப்பால் கூட எரிந்துகொண்டிருந்ததாம்.

லங்கா தகன லீன் எல்லாம், இதற்கு முன்னால் என்ன செய்ய முடியும்? இவ்வாறு பிரிட்டிஷார் ஆயிரம் விமானங்களோடு வந்து போனார்கள் என்ற விஷயம் ஜெர்மானியரில் அனைவருக்கும் தெரிந்திருக்க முடியாது. ஏனென்றால், இ மாதிரியான செய்திகள் அவர்கள் செவிகளில் விழ வொட்டாதபடி கூடிய வரை ஜாக்ரதையாகவே பார்த்து வருகிறார் ஹிட்லர். "ஏதோ சிறு உபத்திரவம் தான்" நேற்றிரவு, வடமேற்கு ஜெர்மனியின் இந்த பிரிட்டிஷ் விமானிகளால் ஏற்பட்டது. சில ஆஸ்பத்திரிகள், பள்ளிகள் மீது 'பாம் க'ளயும், எரிவெடிகளையும் எரிந்து விட்டு போனார்கள் அவர்கள்" என்ற செய்தியையே ஜெர் ன் ரேடியோ ஒலி பரப்பிற்றும். ஆனால், ஜெர்மானியரில் யூகமிக்கவர்கள் ம டும், வடமேற்கு ஜெர்மனியில் தான், பிரமாண்டமான விமானம் கட்டும் தொழிற்சாலைகளும், வேறு யுத்தத் தளவாடங்களைத் தயாரிக்கும் பல ஆலைகளும் இருக்கின்றன என்பதையும், வெறும் ஆஸ்பத்திரி மீது குண்டு வீச பிரிட்டிஷ் விமானிகள் இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டார்கள் என்பதையும் தெரிந்து கொண்டிருப்பார்கள். உரக்கப் பேசினால் உதை விழும். ஆகவே, உள்ளூரவே எண்ணி, உதறல் எடுத்துக் கொண்டு, 'கடவுளே! எங்கிருந்து கொணர்ந்து இந்த நாட்டிலே போட்டு வைத்தாய் இந்த ஹிட்லர் யமனை, ஒரு நாள் போவது ஒரு யுகமாக இருக்கிறதே! இன்னும் பல தியாகங்கள் செய்ய வேண்டுமாம். இவரை யார் ருஷ்யச் சேற்றிலே கால் வைத்துத் திணறச் சொன்னார்கள்? இவருடைய பேராசையைத் திருப்தி செய்ய, ஜெர்மன் மக்களாகிய நாம் தானா காவு கொடுத்து வர வேண்டும் நமது அருமைக் காதலர்களையும், மக்களையும், பந்துக்களையும், நமது அரிய ஆஸ்தி, பாஸ்திகளையும்? சீ! என்ன மனுஷன் இவன்! எவ்வளவோ அழகான நமது நகரங்கள் எல்லாம பாழாகி வருகின்றனவே! என்று மனசிற்குள்ளகவே குமுறிக் கொண்டிருப்பார்கள் அவர்கள் எல்லோரும்.

சென்ற வருடத்திலும் சரி, ஏன், இந்த வருட ஆரம்பத்திலும் சரி, ஜெர்மனி மீது, ஒரே நாளில் ஆயிரம் விமானங்களைப் படையெடுக்க பிரிட்டன் அனுப்பக் கூடும் என்று யாராவது சொல்லியிருந்தால், அதைக் கேட்டு, 'சரிதான்! அனுப்புகிற போது பார்த்துக் கொள்ளலாம்! அத்தைக்கு மீசை முளைத்தால் தானே சித்தப்பா?' என்று பதில் கேள்வி கேட்டிருப்பார்கள் பலர். ஆனால், சென்ற வாரம் உண்மையிலேயே அத்தகைய படையெடுப்புகள் நிகழ்ந்து விட்டன. இதற்கு மேல் யாரும் கிண்டலாகப் பேச முடியாது. 'ஆயிரம் அல்ல, இரண்டாயிரம் மூவாயிரம் என்று கூட அனுப்புவோம். ஜெர்மனியின் யுத்தத்திற்கு உதவும் ஒவ்வொரு நகரையும் உண்டு இல்லை என்று பார்த்துத் தீர்த்து விடும் வரை சும்மா இரோம். ஹிட்லரை வழிக்குக் கொண்டு வர இதை விடச் சிறந்த வழி வேறு எதுவுமில்லை' என்று சீமையில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் வார்த்தை பொய்யாகாது என்பது மட்டும் நாம் தைரியமாகச் சொல்லலாம். 'எப்பொழுது அனுப்புவார்கள் அத்தனை விமானங்களையும்?' என்று கேட்டால், அதற்கு 'சட்' என்று பதில் கூற முடியாது.

மெள்ள மெள்ளத் தான், திட்டமாக ஏற்பாடுகள் செய்து கொண்டு வர வேண்டும். ஏற்பாடுகள் பூர்த்தியான பிறகு தானே, மேலே விழுந்து தாக்குவது எப்பொழுது என்று சொல்லலாம். இல்லை! அதை முன் கூட்டிச் சொல்வது தான் சரியாகுமா? ஜெர்மானியர் எதிர்பார்த்திருக்கையில், எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத சமயத்தில், 'டம், டம்', என்று கொண்டு போய், குண்டுகளை வழங்கினால் தானே, அவர்களும் ஆச்சரியப்படுவார்கள்? கூடிய சீக்கிரமே அமெரிக்காவிலிருந்துங் கூட, இந்தக் கைங்கரியத்தைச் செய்வதற்கென்று ஏராளமான விமானங்கள் வரப் போகின்றனவாம். தவிர, சீமையில், ஐரோப்பா மீது படையெடுக்க வென்று ஏராளமான படைகள் குவித்து வைக்கப் பட்டிருக்கின்றன. அவர்களுடைய திவ்ய தரிசனத்தையும், ஜெர்மானியர் தக்க சமயத்தில் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மற்றொரு முறை சொன்னால், மற்றொரு 'டங்கர்க்' கதை நிகழாதென்பது நிச்சயம். யுத்தக் கதையை ஒரே யடியாக முடிக்கவே, பிரிட்டனிலிருந்து ஐரோப்பாவில் சென்று படைகள் இறங்கும்.

இந்தப் படையெடுப்புப் பீதி ஜெர்மானியருக்கு ஏகமாக இருக்கிறது. அதனால் தான், அவர்கள் மேலைக் கடற்கரை யோரத்தில் உள்ள நாடுகளில் எல்லாம் சரியான பாராவிற்கு ஆட்களையும் விமானங்களையும் வைத்திருக்கிறார்கள். இந்தப் பீதியில்லா விட்டால், ருஷ்ய யுத்த ரங்கத்திற்கு இங்கிருந்து எவ்வளவா விமானங்களையும் ஆட்களையும் அனுப்பி யிருப்பார்களே! நார்வேயிலே படையெடுப்பு ஏற்பட்டால், கடற்கரை யோரத்தில் உள்ள பட்டணங்களை யெல்லாம் காலி செய்ய திட்டம் போட்டு வைத்திருக்கிறார்களாம்.

திட்டம் என்றதும் ஆப்பிரிக்கா நினைவு வருகிறது. அங்குள்ள ஜெர்மன் தலைவர் மகா சூரர் தான். ஆனாலும், அவர் போட்ட திட்டங்க ளெல்லாம் பாழாகி விட்டன. ஜெர்மனிக்கு அவசர அவசரமாக ஓடிப்போய், 'ஓய் ஹீ லரே! ஆப்பிரிக்கச் சண்டையில் வெற்றி பெற்றால் அல்லாது, மற்றச் சண்டையில் ஏற்படும் வெற்றிகளுக்கு மதிப்பில்லை. ஆகவே, ஆப்பிரிக்காவில் உள்ள நமது பலத்தைப் பெருக்க வேண்டும். அதற்கு, அங்கு ஆட்களையும், விமானங்களையும், பீரங்கிகளையும், மற்றப் பொருட்களையும் ஏராளமாகக் கொண்டுபோக வேண்டும். அதற்கு, பிரிட்டிஷ் விமானங்களும், மத்ய தரைக் கடற்படைகளும் இடைஞ்சலாக இருக்கும். அதற்காக, உடனே மால்டாவைப் பஸ்மமாக, இடைவிடாது தாக்க உத்திரவிடும். அங்கே பிரிட்டிஷ் நினைவெல்லாம் போய்விடும். அந்த சந்தடி சாக்கிலே, நான் விட்டு அடிக்கிறேன் ஒரு அடி மளமள வென இத்தாலி, ஸிஸிலி, க்ரீட், க்ரூஸ் இங்கிருந்தெல்லாம். கப்பல்களில் கொண்டு குவித்துக் கொள்ளுகிறேன் வேண்டியதை என்று சொல்லியிருக்கிறார். அந்தப்படியே காரியம் நடந்தது. ஆனால், நேசதேசத்தாரும் அப்பொழுது சும்மா இல்லை என்பது, ராமெல் மும்முரமாக சென்ற வாரம் போரைத் தொடங்கியதும் தெரிந்து விட்டது. ராமெவிடம் ஏராளமான டாங்கிகள் இருக்கின்றன இந்த பலத்தைக் கொண்டு, நேசதேசப் படைகளைத் திணற செய்து, டோப்ருக்கைக் கூடப் பிடித்து விடலாமென்று கனவு கண்டு கொண்டிருந்தார் போலிருக்கிறது. கடல் வழியாகக் கூட ஆட்களைக் கொணர்ந்து இறக்கி விட்டார். கொஞ்சம் முன்னேறினாலும், அவர் நினைத்தபடி எதும் நடக்க வில்லை. பயங்கரமாக, அங்கே போர் நடந்து கொண்டிருக்கிறது. வெயிலின் கடுமையும் மணற்காற்றின் அட்டகாசமும் சொல்லி முடிய வில்லை, நிலைமை ரொம்ப நெருக்கடியானது தான். எதிரிக்குச் சேதம் எவ்வளவு என்பதைக் கூடக் கணக்கிட முடிய வில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆனால், ராமெலுக்கு இந்நப் போரின் போது, ஒரு கட்டத்திலே தூக்கி வாரிப் போட்டிருக்கும் என்பது நிச்சயம், வெகு ரகசியமாக முதல் தடவையாக, லிபியப் போர்முனையிலே, நெருப்புக கக்கி விமானங்களும், நூதன வெடிகுண்டெறியும் விமானங்களும் தோன்றி, அச்சு நாட்டுப் படைகளை ஹதம் செய்ய ஆரம்பித்ததும், ராமெலுக்கே ஆச்சர்யமாகத் தானிருந்திருககும்!

மத்யதரைக் கடலில் பிரிட்டிஷ் கப்பற்படை பூரண பலத்துடனில்லை. ஆகவே, ராமெலுக்குக் கூடிய வரை அதிக 'சப்ளை' போய்க் கொண்டு தானிருக்கிறது ஆனால் நேசதேசப் படைகளுக்குச் செல்லும் உதவிகளுக்கும் அதிக இடைஞ்சலில்லை.

லிபியப் போரில் இப்பொழுது ஒரு விசேஷம். அச்சு நாட்டு டாங்கிகள், பிரிட்டிஷாரின் பிரதேசங்களில் வந்து வாலாட்டுகின்றன. ஆகவே அடிபட்ட டாங்கிகளை, அச்சு நாட்டினர் எடுத்துப் போய், ரிப்பேர் செய்தும் மீண்டும் உபயோகிக்க முடிவதில்லை. அதுவரை நமக்கு அத்தனையும் லாபந் தானே?

இங்கே நடக்கும் போர் ஒரு திட்டமான முடிவை எப்படிக் காணமுடியாதிருக்கிறதோ, அதே போல் தான், ருஷ்ய அரங்கத்திலும், கார்க்கோவ் பிரதேசத்தில் நடக்கும் போரும் முடிவு காணாதிருக்கிறது.

ருஷ்யர்களின் திடமனதையும், வீரத்தையும் புகழ்ந்து ஜெர்மனியரே அடிக்கடி பேசி வருகிறார்கள். 'எப்பக்கந் திரும்பினாலும் எரி நெருப்பு என்று ஏற்பட்டால் ஒழிய, ருஷ்யர்கள் களைப்பதேயில்லை. அவர்களை வெல்வது என்பது விளையாட்டு விஷயமல்ல' என்கிறாராம் ஒரு ஜெர்மானியர்.

ருஷ்யர்களும், ஜெர்மானியர்களும், இரண்டு பயங்கர வேட்டை நாய்கள் போல், ஒரு கழுத்தில் மற்றொருவர் நன்றாகக் கடித்துக் கொண்டு, விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறாப் போலிருக்கிறது. இரு கட்சிகளுக்கும் ஏக நஷ்டம். ருஷ்யர்கள் நீண்ட தூரம் சுடும் பீரங்கிகளையும், குதிரைப் படைகளையும் கொண்டு வந்திருக்கிறார்களாம். அவர்களுடைய நோக்கம் என்னவோ, கார்க்கோவைப் பிடிப்பது அல்ல என்பதையும், ராஸ்டாவ் பக்கமாகப் பாய எண்ணிக் கொண்டிருந்த ஏராளமான ஜெர்மன் படைகளின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவது தான் என்பதையும் ருஷ்யர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ருஷ்யர்களுக்குச் சீமையிலிருந்து, பல கஷ்டங்களையும் தாண்டிக் கொண்டு, உதவி வந்து கொண்டிருக்கிறது. 'அச்சு நாடுகளின் யுத்த யந்திரங்கள் பூரணமாக அழியும் வரை ராஜியில்லை. வருஷத்திற்கு அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட விமானங்களைத் தயாரிப்போம்'' இவ்வருஷக் கடைசிக்குள் 45 லக்ஷம் பேர்களை ராணுவத்தில் கொண்டிருப்போம். அமெரிக்கப் படைகள் ஐரோப்பியப் படையெடுப்பில் கலந்து கொள்ளும் என்று அமெரிக்காவிலிருந்து முழங்குகிறார்கள் பலர்.

அமெரிக்க உதவி (நசநாடுகளுக்குப் பூரணமாக இருக்கிறது. உலகெங்கும் அமெரிக்கப் படைகள் பரவியிருக்கின்றன. இந்தியாவிலே போருக்கான ஆயத்தங்கள் ஜரூராக நடந்து வருகின்றன. கொரில்லாச் சண்டை கூட கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஜப்பானியர் சீனா மீதே கண்ணாயிருக்கிறார்கள். அங்கே சில இடங்களில் அவர்கள் விஷவாயுக்களைக் கூடப் பிரயோகிக்கத் தயங்கவில்லை. என்ன செய்து என்ன! அகலக் கால் வைத்தவனுக்கான கதி தானே இவர்களுக் கெல்லாம்?

---

# ரூஸ்வெல்டுக்குப் பொதுஜன ஆதரவு.

இப்போது அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்டின் போக்கு சரிதானா அல்லவா என்பது பற்றி பொது ஜனங்களின் கருத்தை அறிய வேண்டி ஓட்டு எடுத்ததில் 100-க்கு 78 பேர்கள் சாதகமாகவும் 13 பேர்கள் பாதகமாகவும் ஓட்டுக் கொடுத்தார்கள். இதிலிருந்து அவருடைய போக்கைப் பொது ஜனங்கள் பெரிதும் ஆதரிக்கிறார்களென்று தெரிகிறது.

---

# போர் வீரர்களுக்குப் படைத் தலைவர் ஆறுதல்.

பர்மா போர் முனையிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்துள்ள இந்தியப் போர் வீரர்களுக்கும் பிரிட்டிஷ் போர் வீரர்களுக்கும் பிரதம தளபதி ஜெனரல் ஸர். ஏ. வேவல் கீழ்க் கண்ட ஆறுதல் மொழியைக் கூறியிருக்கின்றார் :—

பர்மாவில், எதிரிகளோ ஏராளம். அவர்கள் ஆகாயப் படையோ மிகவும் பலம் பொருந்தியது. உங்களுக்கு ஓய்வோ, பக்க ப...மே, கிடையாது. இவ்வளவு கஷ்டமான நிலைமையில் நீங்கள் சென்ற சில மாதங்களாகப் போராடிக் கொண்டு வந்தீர்களென்று நான் நன்றாக அறிவேன்.

இப்படிப் பட்ட நிலை ஏற்படத் தான் செய்யும். ஏனென்றால், தற்காலிகமாக ஜப்பானியர்கள் கடலில் ஆதிக்கம் பெற்று விட்டார்கள். இதனால் தான் ரங்கூனை நாம் காப்பாற்ற முடியவில்லை. அன்றியும் பக்க பலச் சேனைகளை எதிரிகள் ஏராளமாகக் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டார்கள். இந்தியாவிலிருந்து பக்க பலச் சேனைகளை உங்களுக்கு அனுப்பவும் வழி தடைப் பட்டு விட்டது.

**முக்கியமான வேலை.** உங்களுடைய முக்கியமான வேலை, எதிரிகளைத் தடைப்படுத்தி, இந்தியப் பாதுகாப்புக்களைத் தகுந்தபடி பலப்படுத்திக் கொள்ள அவகாச முண்டாக்கித் தருவது தான். இந்த வேலையைச் செய்து முடிப்பதில் உங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்த போதிலும், மிகவும் கெட்டிக் காரத் தனமாகவும் வீரத்தோடும் இதைச் செய்து முடித்தீர்கள்.

பெருத்த கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக் கொண்டு மன உறுதியோடு இக்கடமையை நீங்கள் செய்து முடித்ததற்கு நான் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். நீங்கள் பண்பட்ட படையினர். கொஞ்ச கால ஓய்விற்குப் பிறகு. மீண்டும் நீங்கள் போர் முனைக்குச் சென்றால், இப்போது நமக்குள்ள சாதகமான நிலைமையில், எதிரிகளை வெல்ல உங்களால் நிச்சயமாக முடியும் என்று அறிவீர்கள்.

---

# பர்மா படைத் தலைவர் அறிக்கை.

பர்மா படைத் தலைவர் ஜெனரல் ஹானரபில் சர் எச். ஆர். எல். ஜி. அலெக்சாந்தர் கீழ்க் கண்ட விசேஷ அறிக்கையை விடுத்திருக்கிறார் :—

பர்மாவிலிருந்து நம் படைகள் பின் வாங்கியவுடனேயே, பர்மாவில் படைத் தலைவன் என்னும் முறையில் என் கடமை தீர்ந்து விட்டது. நாம் பின் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட போதிலும், சாம்ராஜ்யப் போர் முயற்சியில், நம் உத்தியோகஸ்தர்களும் வீரர்களும் செய்துள்ள வேலைகளைப் பற்றி பெருமை கொள்ள வேண்டும்.

ரங்கூனை இழந்த பிறகு, நம் படையும் சீனப் படைகளும் சேர்ந்து எதிரிகள் தம் இருப்புப் படைகளை எல்லாம் போர் முனைக்கு அனுப்பும்படி செய்து, வேறெந்தப் போர் முனைக்கும் அப்படைகள் போக ஒட்டாதபடி அவர்கள் நடவடிக்கைகளில் மிகவும் தாமத மேற்படத் தக்கபடி செய்து வந்தன. இந்தக் கடுமையான வேலையைச் செய்து முடிக்க, உங்களுக்கு எந்த விதமான உதவியுமில்லை. ஓய்வுமில்லை. இந்தப் போராட்டம் மிகவும் கடுமையானது தான். நம் படைகள் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் சகித்துக் கொள்ளுகின்றன. வீரமும் மிகுந்தவை. இவை காரணமாகத் தான், மழை காலத்திற்கு முன்னதாகவே எதிரிகள் இந்திய எல்லைப் புரத்திற்கு வந்து விடாதபடி தடுக்க முடிந்தது.

மீண்டும் எதிரிகளோடு போராட வேண்டியதற்கு நம் படைகள் தம்மை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். இறுதியில் நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்னும் உறுதியோடும் அவர்கள் தம் கடமைகளைச் செய்ய முற்படுவார்களென்று நம்புகிறேன்''.

# ஜப்பானே! உனக்கு நன்றி!

"இந்தியர்களை எதிரிகள் என்று நினைக்க வேண்டுமென்ற எண்ணமே ஜப்பானுக்கு இல்லை".

—ஜெனரல் டூஜோ.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—ஏனென்றால், ஹாங்காங்கிலும் மலேயாவிலும் பர்மாவிலும் இந்தியப் படை வீரர்களைக் கொன்றீர்கள், கைதி செய்தீர்கள், கொடுமைப் படுத்தினீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—எச்சரிக்கை யில்லாமல் கப்பல்களை மூழ்கடித்தீர்கள். அப்போது இந்தியக் கப்பல் படை வீரர்களும் மூழ்கி மடிந்தார்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—ரங்கூன், கொழும்பு, திரிகோணமலை, காக்கிநாடா, விசாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் உள்ள பொது ஜனங்களைக் கொன்றீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—உன் அழிவு வேலையால் இந்தியாவில் கைம்பெண்களும் அநாதைப் பிள்ளைகளும் ஏற்பட்டு விட்டார்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—மலேயாவிலும் பர்மாவிலும் தம் முயற்சியால் தமக்கு இருப்பிடத்தைத் தேடிக்கொண்ட இந்தியர்கள், மீண்டும் இந்தியாவில் புகலிடம் கொள்ள வேண்டிய அவசிய நிலமைக்குக் கொண்டு வந்து விட்டீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—அநேக இந்தியக் குடும்பங்களை, கவலைக்கும் தடுமாற்றத்திற்கும் ஆளாக்கி விட்டீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—இந்தியாவில் விலை வாசிகள் மிகவும் உயர்ந்து விட்டன.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு கிடைப்பது கூட அரிதாகி விட்டது.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—ரயில்வே, தபால் முதலிய வசதிகளுக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கி விட்டீர்கள்.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—அவரவர்கள் தம் வேலைகளைச் செய்ய முடியாமல் தடைப்படுத்தி வாழ்க்கையை மிகவும் கஷ்டமான தாக்கி விட்டீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—இந்தியாவிற்கு யுத்தத்தைக் கொண்டு வந்து விட்டீர்கள் !

"உங்களை விடுவிக்கவே வருகிறோம் என்று அவர்கள் சொல்வார்கள்.—அது சுத்தப் பொய்."

திருமதி ஷியாங்கே ஷேக்.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.